தமிழ்நாடு சட்ட மன்றம்.

செவ்வாய்க் கிழமை, 1972 ஆகஸ்ட் 22.

சென்னை, செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்ட மன்ற மண்டபத்தில் பிற்பகல் 4 மணியளவில், மாண்புமிகு சட்டமன்றத் தலைவர் (திரு. சி. பி. சிற்றரசு) அவர்கள் தலைமையில் சட்ட மன்றம் கூடியது.

1. வினாக்கள்—விடைகள்

வெள்ளிக் குறியிட்ட வினாக்கள்.

Translation and Publication of the UNESCO, Paris in Tamil

*172 Q.—THIRU S. VELLAPANDIAN (on behalf of THIRU V. ISVARMURTI): Will the Hon. the Minister for Education and Local Administration be pleased to state—

(a) whether the Government have any proposal to translate and publish in Tamil select publications of the UNESCO, Paris; and

(b) if so, the details thereof?

பாரிஸ் யூனெஸ்கோ வெளியீடுகளைத் தமிழில் மொழிபெயர்த்து வெளியிடுதல்

திரு. எஸ். வெள்ளப்பாண்டியன் (திரு. வ. ஈஸ்வரமூர்த்தி சார்பில்): மாண்புமிகு கல்வி-உள்ளாட்சி நிர்வாக அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) பாரிஸ் யூனெஸ்கோவின் தெரிந்தெடுத்த வெளியீடுகளைத் தமிழில் மொழிபெயர்ப்பு செய்து வெளியிடும் செயற்குறிப்பு ஏதேனும் அரசிடம் உள்ளதா?

(இ) ஆமெனில், அதன் விவரங்கள் யாவை?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: இல்லை.

திரு. எம். ராஜா அய்யர்: தலைவர் அவர்களே, எந்தெந்தப் புத்தகங்கள் வெளிவரும் என்று ஏதேனும் தகவல் கொடுக்க முடியுமா என்று தெரிந்து கொள்ள விரும்புகிறேன். அங்கிருந்து வருகிற சஞ்சிகைகள் மொழி பெயர்க்கப்படுகின்றன. அதில் ஒன்று 'கொரியர்'. வேறு சஞ்சிகைகளைக் கொண்டுவர முயற்சிகள் எடுக்கப்பட்டிருக்கின்றனவா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, யுனெஸ்கோ அமைப்பு மூன்று புத்தகங்களைத் தமிழில் மொழிபெயர்த்து வெளியிட வேண்டுமென்று கேட்டுக்கொண்டது. அது செயற்குறிப்பில் இருந்தது.

(1) கல்வியும் ஆசிரியர் பயிற்சியும் (ஆங்கிலம்),

(2) 13 வயது குழந்தைகளின் மூலம் வீடும், சமூகமும் கொண்டுள்ள சார்பு (ஆங்கிலம்),

(3) இன இலக்கினை (ரேஸ் கான்செப்ட்).

இந்த மூன்று புத்தகங்களைத் தமிழில் மொழிபெயர்க்கலாம் என்று யோசனை கூறப்பட்டது. இப்புத்தகங்களைப் பள்ளி ஆசிரியர்களின் இலவசக் கையேடாகப் பயன்படுத்த வேண்டுமென்ற அடிப்படையில் தமிழக அரசு அதனை வெளியிட முயற்சித்தது. அதற்குள் நாட்டின் நெருக்கடி நிலைமையை உத்தேசித்து நிறுத்தி வைக்கப்பட்டது. மறுபடியும் தக்க சமயத்தில் புதுப்பிக்கும்படி பாடத் திட்டக் குழுவினர் கேட்டுக்கொள்ளப்பட்டிருக்கிறார்கள்.

Second Grade Pandits of Madurai Educational District.

* 173 Q.—THIRU M. RAJAH IYER : Will the Hon. the Minister for Education and Local Administration be pleased to state—

(a) the number of Second Grade Pandits serving in the High Schools in the Madurai Educational District, whose salaries have not yet been refixed as per the Second Pay Commission's recommendations; and

(b) the reasons therefor?

மதுரைக் கல்வி மாவட்டத்திலுள்ள இரண்டாம் நிலைப் பண்டிதர்கள்.

திரு. எம். ராஜா அய்யர் : மாண்புமிகு கல்வி—உள்ளாட்சி நிர்வாக அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) மதுரைக் கல்வி மாவட்டத்திலுள்ள உயர்நிலைப் பள்ளிகளில் பணிபுரியும் இரண்டாம் நிலைப் பண்டிதர்கள் எத்தனை பேருக்கு இரண்டாவது சம்பள ஆணைக் குழுவின் பரிவுரைகளின்படி இன்னும் ஊதியம் மாற்றியமைக்கப்படவில்லை?

(இ) அதற்கான காரணங்கள் யாவை?